# தொகை நூல்கள்

**'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம்**
**என்று இத்திறத்த எட்டுத்தொகை.**

- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை சங்க நூல்களாகும்.
- இவற்றை பதினெண் மேல் கணக்கு நூல்கள் என்றும் கூறுவர்.

| **எட்டுத்தொகை நூல்கள்** |
|---|
| **அகப்பொருள் பற்றியவை :** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கழித்தொகை, அகநானூறு |
| **புறப்பொருள் பற்றியவை :** புறநானூறு, பதிற்றுப்பத்து |
| **அகமும் புறமும் கலந்து வருவது :** பரிபாடல் |

**எட்டுத்தொகை**

## 1.புறநானூறு

### நூற் குறிப்பு

- புறநானூறு – புறம்+ நான்கு + நூறு
- இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய தொகை நூலாகும்.
- புறப்பொருள் என்பது பண்டைய தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கொடைத்திறன், வீரம் போன்றவற்றை அறிய உதவும் நூலாகும்.
- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு சங்க நூல்களுள் ஒன்றாகும். சங்க இலக்கியம் ஈராயிரம் (2000) ஆண்டுகள் பழைமை உடையது.
- இந்நூலில் உள்ள பாடல்கள், பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது.
- அரசன் முதல் சாதாரணக் குடிமகன் வரை பல்வேறு தொழில் புரிந்தவர்களும் புலமை மிக்கவராய்ப் பாடல்கள் இயற்றியுள்ளனர். அவர்களின் பாடல்கள் புறநானூற்றில் உள்ளன.
- புறநானூற்றிற்கு கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கிபி இரண்டாம் நூற்றாண்டு ஆகும்.
- இந்நூலை தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.
- இந்த நூல் பண்டைய கால தமிழர்களின் உயர்ந்த நாகரிகம், அரசியல், போர்த்திறம், சமுதாய பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவும் கருவூலம் ஆகும்.
- புறநானூற்றில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் உள்ளன. இவற்றில் உழிஞைத் திணை பாடல்கள் இல்லை.
- ஜி. யு. போப் என்ற மேல்நாட்டு அறிஞரால் இந்நூலின் சில பாடல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- ஏட்டுச்சுவடிகளில் இருந்த இந்நூலை முறையாக அச்சில் ஏற்றி பதிப்பித்த பெருமை உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைச் சேரும்.
- பதிப்பித்த ஆண்டு 1894.

## 2. அகநானூறு

### பெயர்க்காரணம்

- அகம் + நான்கு + நூறு – அகநானூறு அகப்பொருள் சம்பந்தமான நானூறு பாடல்களைக் கொண்ட நூலாதலின் அதனை அகநானூறு என பெயர் பெற்றது. இந்நூல் அகம் எனவும் வழங்கப்பெறும்.
- இந்நூல் அகப்பொருள் நூல்களுள் பதின்மூன்று அடி முதல் முப்பத்தொரு அடிகள் வரை அமைந்த ஆசிரியப்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

பாக்களைத் தொகுத்து உருவாக்கப்பட்டதால் இது நெடுந்தொகை எனவும் வழங்கப்பெறும்.

**அகப்பொருள்**

- அறம், பொருள், இன்பம் என்பவற்றுள், ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்து உணர்வால் உணர்ந்து இன்புறக்கூடியதும் புறத்தார்க்கு இத்தகைத்து என எடுத்துக் கூற இயலாத்துமாகிய இன்பத்தைப்பற்றி கூறுவதே அகம் என்றும் அகப்பொருள் என்றும் கூறப்படும்.

**நூல் அமைப்பு**

- அகநானூறு என்னும் இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர் பாடிய அகப்பொருள் பாடல்களைத் தொகுத்து அமைத்த நூல்.
- இதனைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர் என்பவராவர்.
- தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிர பெருவழுதியாவான்.
- பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர் இதற்கு கடவுள் வாழ்த்து பாடியுள்ளார்.
- இந்நூலில் முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், அடுத்த 180 பாடல்கள் மணிமிடை பவளம் எனவும், அடுத்த 100 பாடல்கள் நித்திலக் கோவை எனவும் வழங்கப்பட்டு இந்நூல் முப்பெரும் பிரிவுகளாய் அமைந்துள்ளது.
- இந்நூலை 1,3 ஒற்றைப்படை எண் கொண்ட பாடல்கள் யாவும் பாலைத்திணை பாடல்களாகவும், 2,8 என்னும் எண் கொண்ட பாடல்கள் யாவும் குறிஞ்சித் திணை பாடல்களாகவும், 4, 14 என்னும் எண் கொண்ட பாடல்கள் யாவும் முல்லைத்திணை பாடல்களாகவும், 6, 16 என்னும் எண் கொண்ட பாடல் யாவும் மருதத்திணை பாடல்களாகவும், 10, 20 என்னும் எண் கொண்ட பாடல்கள் யாவும் நெய்தல் திணை பாடல்களாகவும் தொகுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இதன் மூலம் பாட்டின் எண்ணை கொண்டே அப்பாடல் எத்திணைக்கு உரியது என எளிதில் அறியலாம்.

சொல்ல வந்த கருத்தை உள்ளுறை வழியாக உரைப்பது அகநானூற்று பாடல்களின் சிறப்பு. அகநானூற்றில் 145 புலவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

| | |
|---|---|
| பாலைத்திணை பாடல்கள் | 200 |
| குறிஞ்சித்திணை பாடல்கள் | 80 |
| முல்லைத்திணை பாடல்கள் | 40 |
| மருதத்திணை பாடல்கள் | 40 |
| நெய்தல் திணை பாடல்கள் | 40 |

**நூலின் பெருமை**

- இந்நூல் பண்டையகால இன்பியல் வாழ்க்கைச் சுவைபடச் சித்தரிப்பதுடன் பண்டைய தமிழரின் உயர்ந்த பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் ஐந்நிலமைப்பு, அங்கு வாழும் மக்களின் இயல்புகள், தொழில், உணவு, பொழுதுபோக்கு முதலியவற்றை இயற்கை நலம் அமைய எடுத்துரைக்கிறது.
- இடையிடையே இயற்கை வருணனைகள், உவமை ,உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலிய அணி நலங்கள் அமைய கற்பவர் மனம் களி தளும்பக் கவினுறப் புனைந்து காட்டுகிறது.
- அகப்பொருள் பாடல்களில் சுட்டி ஒருவர் பெயர் கூறுதல் கூடாது. தலைவன், தலைவி, தோழி. செவிலி என்று


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கிளவிக்குரியர் கூற்றாகவே யாவும் கூறப்பட வேண்டும் என்பது மரபு.

- ஆதலால், பழந்தமிழ் வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியவர் தம் வரலாற்று நிகழ்ச்சிகள் நேரே கூறப்படாவிடினும் உவமைகள் வாயிலாக கூறப்படுகின்றன ஆதலால், இந்நூல் வரலாற்று ஆராய்ச்சிக்கும் பேருதவி புரிவதாகும். எட்டுத்தொகை நூல்களில் எந்த சிதைவும் குறைவும் இன்றி நிறைவுடன் கிடைத்துள்ளவை அகநானூறும் கழித்தொகையும் ஆகும்.

**3. நற்றிணை**

**நூல் குறிப்பு**

- எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், நல் என்னும் அடைமொழி பெற்று போற்றப்படும் நற்றிணையே ஆகும்.
- நற்றிணை பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட தொகுப்பு நூல் ஆகும்.
- ஓரறிவு உயிர்களைக் கூட விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலான தமிழர்தம் உயரிய பண்புகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பும் நூல் இது.
  - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை திணைகளுக்கும் பாடல்கள் உள்ளன.
  - இதில் உள்ள பாடல்கள் ஒன்பது அடிச் சிற்றெல்லையும், பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை. (அதாவது குறைந்தது ஒன்பது அடியிலிருந்து 12 அடி வரை பாடல்கள் அமைந்துள்ளன) இப்பாடல்களை தொகுப்பித்தவர் பண்பாடு தந்த மாறன் வழுதி.
- நற்றிணை பாடல்கள் நானூறு. பாடிய புலவர்கள் 275 பேர்.
- இதற்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**4. குறுந்தொகை**

**நூல் குறிப்பு**

- கடைச்சங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை நானூறு அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் நூலாகும்.
- இந்நூலின் பாடல்கள், நான்கடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையவை. ஆனால் ஒன்பதடியில் உள்ள 307, 391 ஆகிய இரு பாடல்களும் இத்தொகையில் இடம் பெற்றுள்ளன.
- நல்ல குறுந்தொகை என்ற அடையுடன் இந்நூல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.
- தொகை நூல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பெற்றதாக இந்நூல் கூறப்படுகின்றது.
- இந்நூலின் பாடல்கள் பல, உரையாசிரியர்கள் பலரால் பல்வேறு உரை விளக்கங்களில் மேற்கோளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- இந்நூலின் 165 செய்யுட்களே மேற்கோளாகப் பயன்படுத்தப் பெறாதவை. இறையனார் களவியல் உரையாசிரியர், குறுந்தொகை நானூறு என்று இந்நூலை குறிப்பிடுகின்றார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ஆனால் கடவுள் வாழ்த்து நீங்கலாக இந்நூலில் 401 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய தேவ பெருந்தேவனார்.
- இத்தொகை நூலை தொகுத்தவர் பெயர் பூரிக்கோ என்றும் இத்தொகை பாடியோர் இருநூற்றைவர் என்றும் பழங்குறிப்பு ஒன்று காணப்படுகின்றது.
- இந்நூலில் உள்ள பத்துப் பாடல்களின் ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.
- குறுந்தொகையின் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை வகுத்தார் என்றும், எஞ்சிய இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வழங்கினார் என்றும் நச்சினார்க்கினியர் உரை சிறப்பு பாயிரத்தில் உணரலாம்.
- ஆனால் அவ்விருவர் உரையும் இன்று வரை நமக்கு கிடைத்தில.
- பெயர் அறியப்படாத சில பாடல்கள், அப்பாடல்களில் அமைந்துள்ள தொடர்களால் குறிக்கப்பட்டுள்ளன.
- இந்நூல் தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதை ஆக்கி கூறுகிறது.
- 1915 ஆம் ஆண்டு சௌரிப் பெருமாள் அரங்கனார் முதன்முதலில் இந்நூலை பதிப்பித்தார்.

## 5. ஐங்குறுநூறு

### பெயர்க்காரணம்

- ஐந்து+ குறுமை+ நூறு – ஐங்குறுநூறு. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, முல்லை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு நூறு பாட்டுகளாகத் தொகுக்கப்பட்ட நூல் இது.
- ஆதலின் இந்நூல் ஐங்குறுநூறு என பெயர் பெற்றது.
- இந்நூலில் மூன்று அடி சிறுமையும் ஆறடி பேரெல்லையும் உடைய ஐந்நூறு ஆசிரியர் பாக்கள் உள்ளன.
- அதனால் அளவாலும் பொருளாலும் இந்நூல் இப்பெயர் பெற்றது.

### நூல் தோன்றிய வரலாறு

- இந்நூலை தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.
- தொகுப்பித்தவர் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.
- யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன், இன்பப் பொருள் அமைந்த அகப்பொருள் பாடல்கள் திணைக்கு நூறாய் ஐந்நூறு பாடல்களைக் கொண்ட நூல் ஒன்றை உருவாக்கித் தமிழ் உலகிற்கு அளிக்க விரும்பினான். தன் விருப்பத்தை கூடலூர் கிழார் என புலவரிடம் கூறினார்.
- அவர் அவ்வித்திணை பாடுதலில் வல்ல புலவர்களைக் கொண்டு நூறு நூறு பாடல்கள் பாட செய்து இந்நூலைத் தொகுத்தளித்தார்.

### நூலாசிரியர்கள்

- அம்முறையில் இந்நூற்பாடல்கள் ஐம்பெரும் புலவர்களால் பாடப்பட்டனவாம்.
- மருதத் திணை பாடியவர் ஓரம்போகியார்
- 'நெய்தல் திணை பாடியவர் அம்மூவனார்'
- 'குறிஞ்சி திணை பாடியவர் கபிலர்'


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 'பாலைத்திணை பாடியவர் ஓதலாந்தையார்'
- 'முல்லைத்திணை பாடியவர் பேயனார்' என்பவர்.
- இந்நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இதனையும் வரிசை முறையையும்.

**"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்**
**கருதுங் குறிஞ்சிக் கபிலன் – கருதிய**
**பாலைஓத லாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலையோ தைங்குறு நூறு** "

என வெண்பாவால் அறியலாம்.

**நூலின் பெருமை**

- இந்நூல் ஒவ்வொரு திணையும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பத்துகளாக நூறு பாடல்கள் அமைந்துள்ளன.
- பல அடிகளைக் கொண்ட பாடல்களில் சொல்லழகும், பொருள் அழகும் அணிநலமும் அமையப் பாடுவது எளிது.
- குறுகிய அடிகளில் அந்நலங்கள் எல்லாம் அமையப் பாடுவது அரிது. அவ்வகையில் வள்ளுவர் இரண்டடிப் பாடல்களில் மிக விரிந்த கருத்துகளைச் செறித்து பாடியதனாலேயே திருக்குறள் அற நூல்களுள் தலைசிறந்ததாய் போற்றப்படுகிறது.
- அதுபோல, அகப்பொருள் கூறும் குறுகிய இன்பியல் பாடல்களைக் கொண்டதாய்ச் சொல்லழகும் பொருள் அழகும் அணிநலமும் செறிந்ததாய் பண்டைய தமிழருடைய வாழ்க்கை முறைகளைத் தன்னுள் கொண்டு காட்டும் கண்ணாடியாய் விளங்கும் பெருமை உடையது ஐங்குறுநூறு.
- இப்பாடல்களின் வாயிலாக பண்டை தமிழரின் காதல் வாழ்க்கை, ஒழுக்கம், நாகரீகம், பழக்கவழக்கங்கள், மகளிர் மாண்பு, அறவுணர்வு ஆகியவற்றை நன்கு உணர முடிகின்றது.
- இப்பாடல்களில் அமைந்த உள்ளுறை உவமம், இறைச்சி போன்றவை நுண்ணதின் ஆராய்ந்து சுவைத்து இன்புறத்தக்கன.
- 'நவில்தொறும் நூல் நயம் போலும்' கூற்றுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது இந்நூல்.

**6. கலித்தொகை**

**நூல் குறிப்பு**

- கலித்தொகையில் அமைந்துள்ள பாடல்கள் மற்றும் ஆசிரியர்கள்.

| **திணை** | **பாடியவர்** | **பாடல்கள்** |
|---|---|---|
| குறிஞ்சி | கபிலர் | 29 |
| முல்லை | சோழன் நல்லுருத்ரன் | 17 |
| மருதம் | மருதன் இளநாகனார் | 35 |
| நெய்தல் | நல்லந்துவனார் | 33 |
| பாலை | பெருங்கடுங்கோ | 35 |

- எட்டுத்தொகையுள் ஒன்றான கழித்தொகை கலிப்பாக்களால் அமைந்தது.
- இது நாடகப் பாங்கில் அமைந்துள்ளது இசையோடு பாடுவதற்கேற்றது.
- கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து 150 பாடல்கள் உள்ளன.
- கழித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும் பிரிவுகளை உடையது.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இப்பாடல்கள் கருத்தாழமும் ஓசையின்பமும் உடையது. எனவே இதனை தமிழ் சான்றோர் கற்றறிந்தார் ஏதும் கலி என சிறப்பித்துக் கூறுவர்.
- எட்டுத்தொகை நூல்களுள்யாப்பு வகையால் பெயர் அமைந்தவை பரிபாடல் கலித்தொகை இரண்டுமாம்.
- கலிப்பாக்கள் பலவகைப்படும். அவற்றுள் ஒத்தாழிசை யாப்பு வகையில் அமைந்தது கலித்தொகை.
- இதற்கு கடவுள் வாழ்த்து பாடியவர் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்.
- சங்க அகப்பாடல்களுள் கைக்கிளைத் திணையிலும் பெருந்திணையிலும் அமைந்த பாடல்கள் கலித்தொகையில் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

**“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக்கிளந்த எழுதிணை என்ப”**

என்ற தொல்காப்பிய இலக்கணத்திற்கு சான்றாக திகழ்வது கழித்தொகை மட்டுமே இதற்கு உச்சிமேற் புலவர் கொள் நச்சுனாக்கினியர் எழுதிய உரை தலைசிறந்ததாகும்.

**நாடக வழக்கினும் உலகியில் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்.**

**–(தொல்காப்பியம் அகத்திணையில்)**

கருத்து தமிழுக்கே உரிய தனி இலக்கணமான அகப்பொருள் இலக்கணத்தை கலிப்பாவினாலும் பரிபாடலாலும் பாடுவது வழக்கம் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

**7. பரிபாடல்**

- திணை – அகமம் புறமும், பாவகை – பரிபாட்டு
- பாடல்கள் – 70 (கிடைத்தவை 22)
- பாடிய புலவர்கள் – 13 பேர்
- அடிவரையறை – 25– 400

**பெயர்க்காரணம்**

- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகை பாக்களும் பலவகையான அடிகளுக்கும் பரிந்து இடம் கொடுக்கும் தன்மையால் பரிபாட்டு ஆனது.
- வேறு பெயர்கள் பரிபாட்டு, ஓங்கு பரிபாடல், இசைப்பாட்டு, பொருட்கலவை நூல், தமிழின் முதல் இசை பாட நூல்.
- பதிப்பித்தவர் உ வே சாமிநாதய்யர்.
- தொல்காப்பிய விதிப்படி அமைந்த தொகை நூலாகும். தெய்வங்கள் அடிப்படையில் பகுப்பு முறை அமைந்த ஒரே தொகுப்பு நூலாகும்.
- பாண்டிய நாட்டை பற்றி மட்டுமே கூறுகிறது. பாண்டிய நாட்டை மட்டும் கூறும் தொகை நூல்கள் பரிபாடல், கலித்தொகை. கின்று என்னும் காலம் காட்டும் இடைநிலை முதலில் பரிபாடலில் தான் அமைந்துள்ளது. உலகத் தோற்றம் குறித்து கூறுகிறது.
- பரிபாடலில் அமைந்துள்ள எண்ணுப் பெயர்களான, 0 – பாழ், நூ – பாகு, 9 – தொண்டு

**திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டுக் காடுகட்கு ஒன்று – மருவினிய**
**வையைஇரு பத்தாறு மாமதுரைநான் கென்ப**
**செய்யபரி பாடல் தியும்.**

**பகுப்பு முறை**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| தெய்வம் | பாடல் எண்ணிக்கை | கிடைத்தவை |
|---|---|---|
| திருமால் | 8 | 6 |
| செவ்வேல் முருகன் | 31 | 8 |
| காடு கால் காளி | 1 | 0 |
| வையை | 26 | 8 |
| மதுரை | 4 | 0 |
| மொத்தம் | 70 | 22 |

### 8. பதிற்றுப்பத்து

- இது சேர மன்னர் மதின்மர் பற்றிய நூல், பத்து புலவர்கள் பாடியது.
- ஒரு மன்னருக்கு பத்து பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்கள் கொண்டது.
- முதற் பத்தும் இறுதி பத்தும் மறைந்தன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் உள்ளது.
- அதில் பாடியவர் பெயர், செய்யுட்களின் பெயர், புலவர்கள் பெற்ற பரிசில் அவ்வரசரின் ஆட்சிக்கால அளவு முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.
- இப்பதிகம் பிற்கால மெய்க்கீர்த்தியின் அமைப்பினை உடையது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அப்பாட்டின் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியன தரப்பட்டுள்ளன.
- இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்ச சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியது.
- மூன்றாம் பத்து, பல்யானை செல்கெழு குட்டுவனை குறித்து பாலை கௌதமனார் படைத்தது.
- நான்காம் பத்து களங்காய் கண்ணி நார்முடிச் சேரலை பற்றி காப்பியாற்று காப்பியனார் பாடியது.
- ஐந்தாம் பத்து கடல் பிறக்கோட்டிய செங்குட்டவன் மீது பரணர் பாடியது.
- ஆறாம் பத்து ஆடு கோட்பாட்டு சேரலாதனை பற்றி காக்கை பாடினியார் இசைத்தது.
- ஏழாம் பத்து செல்வக்கடுங்கோ வாழியாதனை குறித்து கபிலர் பாடியது.
- எட்டாம் பத்து தகடூர் எரிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மீது அரசில் கிழார் யாத்தது.
- ஒன்பதாம் பத்து இளஞ்சேரல் இரும்பொறையை பற்றி பெருங்குன்றூர் கிழார் இயற்றியது.
- இது சேர மன்னர்களின் வெற்றிச்சிறப்பு, நாடு காத்தற் சிறப்பு, கொடை சிறப்பு முதலியவற்றை தெரிவிக்கிறது.

**கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை**
**வட திசை எல்லை இமயம் ஆகத்**
**தென் அம் குமரியோடு ஆயிடை அரசர்**
**முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பு எழச்**
**சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த**
**போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!**

என கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் வெற்றி சிறப்பினை குறிக்கிறது இந்நூல்.

### பத்துப்பாட்டு

- ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து சான்றோர் உரைத்த தண்டமிழ் தெரியில் ஒரு பத்து பாட்டு என்கிறார் நச்சினார்க்கினியார்.
- இதனால் பத்துப் பாட்டின் சிறப்பினை அறியலாம் பத்துப்பாட்டில் உள்ள நூல்களை கீழ்வரும் வெண்பா தெரிவிக்கிறது

**முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடத்தொடும் பத்து**

- இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டின பாலை ஆகிய மூன்றும் அகப்பொருள் பற்றியன மற்ற ஏழும் புறப்பொருள் தழுவியன.
- இவற்றுள்ளும் நெடுநல்வாடையை வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம் என்று வரும் தொடர் தலைவனை அடையாளம் காட்டுகிறது. என்று சுட்டி அதனை புறப்பாடலில் சேர்த்தார் நச்சுனாக்கினியர்.
- அதில் இயற்பெயர் சுத்தப்படவில்லை என்று விளக்கி அதனை இந்நாளை அறிஞர்கள் அகப்பாடலாகவே கொள்கின்றனார்.

1. **திருமுருகாற்றுப்படை**

- பத்துப்பாட்டில் தனியே கடவுள் வாழ்த்து இல்லை.
- திருமுருகாற்றுப்படையை கடவுள் வாழ்த்து போல முதலாவதாக உள்ளது.
- இதனை இயற்றியவர் நக்கீரா.
- இது 317 அடிகளை உடையது. பதினோராம் திருமுறையில் சைவர்கள் இதனையும் சேர்த்துள்ளனர்.
- ஏனைய ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்துவோர் பெயரால் அமைந்திருக்க இது மட்டும் பாட்டுடைத் தலைவன் பெயரால் பெயர் பெற்றுள்ளது.
- இது வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப் படுத்தது என்பர் நச்சுனார்க்கினியர்.
- இதில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவின்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய இடங்களில் முருகன் வீற்றிருக்கும் திறம் பேசப்படுகிறது.
- இந்நூல் புலவராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது.
- எல்லாவற்றிலும், சோலைகள் அனைத்திலும் முருகன் என்று தெரிவிக்கின்றன.

**உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டா அங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளக்கு அவிர்ஒளி**

- என்றும் தொடக்கப்பகுதி முருகப் பெருமானின் ஒளிமிக்க திருத்தோற்றத்தை உவமைக்காட்டி விளக்குகிறது.

**இழுமென இழிதரும் அருவிப்**
**பலமுதிர்ச் சோலை மலைகிழ வோனே!**
என்னும் இறுதி அடிகளில் பன்முறையிலும் லகரம் இசை இனிமை வழங்குகிறது.

2. **பொருநாராற்றுப்படை**

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெரும்பலம் பெறா அர்க்கு அறிவுறீ இச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**

என்பது தொல்காப்பியம் தரும் ஆற்றுப்படை இலக்கணம். இவ்விலக்கணத்திற்கு ஏற்ப கரிகாற் பெருவளத்தானிடம் பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் பரிசை பெற விரும்பும் பிறிதொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது பொருநாராற்றுப்படை.

- இது ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார் இது 248 அடிகளைக் கொண்டது. ஆசிரிய அடிகளோடு சில வஞ்சியடிகளும் இதில் விரவி வந்துள்ளன.
- இந்நூல் பொருநன் கையில் உள்ள யாழ்வர் வர்ணனையோடு தொடங்குகிறது. இது,


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

மணங்கமழ் மாதரை மண்ணி அன்னமாட்சியோடு காட்சி தருகிறது.

- அடுத்து பாடிணியின் அழகிய தோற்றம் முடிமுதல் அடிவரை எடுத்துரைக்கப்படுகிறது.
- இறுதியில் கரிகாலனைக் காணல் அவன் விருந்தோம்பல் சிறப்பு, தரும் பரிசிற் பெருமை, வழியனுப்பும் தன்மை ஆகியன விளக்கப்படுகின்றன.
- இறுதியில் கரிகாற் பெருவளத்தானின் வெற்றி சிறப்புகள், கொடை சிறப்புகள், ஆட்சி திறம், சோழநாட்டு வளம் முதலியவை கூறப்படுகின்றன.

**3. சிறுபாணாற்றுப்படை**

- ஒய்மானாட்டு நல்லியகோடனிடம் பரிசு பெற விரும்பிய பாணன் ஒருவனை அவனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது சிறுபாணாற்றுப்படை.
- இதனை இயற்றியவர் இடைக்களி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.
- இது 269 அடிகளைக் கொண்டது.
- இதில் விறலியின் அழகு, வஞ்சி, மதுரை, உறந்தை ஆகிய நகரங்களின் சிறப்பு, வள்ளல்கள் எழுவரின் செயல்கள், நெய்தல், முல்லை, மருத நில மக்களின் ஒழுகலாறு, நல்லிய கோடணின் நற்பண்புகள் முதலியன பேசப்படுகின்றன.
- இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ என்னும் தொடர், நூலின் பெயர் காரணத்தை தெரிவிக்கிறது.
- இதனை சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை என போற்றுகிறார் தர்க்கையாக பரணி உரைக்காரர்.

**4. பெரும்பாணாற்றுப்படை**

- பரிசில் பெற்ற பேரியாழ்பாணன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் மற்றொரு பெரும்பாணனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக உள்ளது.
- இதனை யாத்தவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். இது 500 அடிகளால் ஆகியது. பேரியாழின் வருணனை, உப்பு, வணிகர் இயல்பு, எயினர், மறவர், இடையர், உழவர், வலைஞர், அந்தணர், ஆகியோர் ஒழுக்கம், பட்டினம், திருவெஃகா, காஞ்சி போன்ற இடங்களின் சிறப்பு இளந்திரையனின் வீரம், கொடை இன்னொரன்ன பண்புகள் ஆகியவற்றை பெரும்பாணாற்றுப்படையில் காணலாம்.
- இடனுடைப் பேரியாழ் முறைவு கழிப்பி என்னும் தொடர் நூலுக்குப் பெயர் வந்த காரணத்தை தெரிவிக்கிறது.

**5. முல்லைப்பாட்டு**

- பத்துப்பாட்டில் அளவால் சிறியது. இது 103 அடிகளால் ஆனது. இதன் ஆசிரியர் காவிரி பூம்பட்டினத்துப் பொன் வாணிகன் மகனார் நம்பூதனார்.
- இதில் அகத்திணையான முள்ளையும், அதற்கு புறமான வஞ்சியின் விரித்துரைக்கப்படுகின்றன. அரசனைப் பிரிந்துறையும் அரசியின் துயரநிலையும், போர் மேற் சென்று பாசறையில் இருக்கும் அரசனின் செயல்களும் சுவைப்பட கூறப்பட்டுள்ளன.
- காற்கால வருகை, பெண்டிர் விரிச்சி கேட்டல், பாசறை அமைப்பு, அங்குள்ள பணிப்பெண்கள், யவண காவலர்கள்,

போரிட்ட படைகளின் நிலை, முல்லை நில இயல்பு முதலியன விளக்கப்படுகின்றன.

- முல்லைப்பாட்டு தலைமகள் நெஞ்சை ஆற்றுப்படுத்தி ஆற்றில் நிற்பதால் நெஞ்சாற்றுப்படை என்றும் இதனைக் குறிப்பர்.

- இது பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல். இந்நூல் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.

### 6. மதுரைக்காஞ்சி

- பத்துப்பாட்டில் மிகப்பெரிய பாட்டு இதுவே.
- 782 அடிகளைக் கொண்டு விளங்குகிறது.
- ஆசிரியப்பாவின் இடையே வஞ்சியடிகள் விரைவில் வருகின்றன.
- இது பாண்டியன் தலையலங்கானத்து சிறுவென்ற நெடுஞ்செழியன் மீது மாங்குடி மருதனார் பாடியது.
- இதனை பெருகு வலமதுறை காஞ்சி என்றும், கூடற்ற தமிழ் என்றும் குறிப்பர்.
- பாண்டியன் நெடுஞ்செழியனின் படையெடுப்பு, தலையாலங்கானப் போர் வள்ளன்மை முதலான செயல்களும், பண்புகளும் மதுரை காஞ்சியில் விரித்து சொல்லப்படுகின்றன.
- மேலும் மதுரையின் நாளங்காடி, அல்லங்காடி, மகளிர், காவலர், அந்தணர் ஒழுக்கம் ஆகியனவும் இப்பாடலில் சிறப்பாக குறிக்கப்பட்டுள்ளன.
- அந்நாளைய மதுரையின் சிறப்பினை உணரத் துணை புரிவது இந்நூல்.
- கரஞ்சி என்பது நிலையாமையை உணர்த்தும் புறத்திணை ஆகும்.

### 7. நெடுநல்வாடை

- இது நக்கீரர் பாடிய 188 அடிகளைக் கொண்ட பாட்டு.
- இப்பாட்டில் அகத்திணைக்குரிய செய்திகளே இடம்பெற்றுள்ளன.
- எனினும் வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம் என்றும் வரும் தொடர் பாண்டியனின் அடையாள மாலையைக் குறிக்கிறது என்று சொல்லி இதனை புறப்பாட்டு ஆக்கிவிட்டார் நச்சினார்க்கினியர்.
- அதனால் இது தலையாலங்கானத்துச் செறுவென்ற பாண்டியனைப் பாடிய பாட்டாயிற்று. ஆனால், இதனை அகப்பட்டாகவே கருதுவோரும் உண்டு.
- தலைமகனைப் பிரிந்து வருந்தும் தலைமகளுக்கு வாடைக்காற்று, ஒரு பொழுது ஓர் ஊழி போல தோன்றும். அதனால் நெடிதாகி வாடையாக அமைந்தது.
- ஆனால் பாசறையில் தங்கியிருக்கும் வேந்தனுக்கு வினைமுடிக்கப் பாங்காக நல்ல வாடையாகவும் இருந்தது.
- ஆனால், இதற்கு நெடுநல்வாடை என்னும் இனிய பெயர் அமைந்தது.
- குளிரின் கொடுமையால் வருந்து மக்கள், ஆநிரைகள், பறவை, விலங்குகள் நிலை, அரண்மனை அமைப்பு, அரசியின் வருத்தம், செவிலியறும், பிறரும் கூறும் ஆறுதல் மொழி, மன்னன் புண்பட்ட மறவர்களை நள்ளிரவில் சென்று ஆற்றுவித்தல் முதலியன விளக்கமாக கூறப்படுகின்றன.
- சொல்லுக்கு கீரன் என்னும் புகழ் மொழியை மெய்ப்பிக்கும் அரிய படைப்பு நெடுநல் நெடுநல்வாடை எனலாம்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**8. குறிஞ்சிப்பாட்டு**

- குறிஞ்சித் திணை பற்றி கூறுதல் இதற்கு குறிஞ்சிப்பாட்டு என்னும் பெயர் அமைந்தது.
- இது ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்ததற்கு கபிலர் பாடியது..
- இதனை உரையாசிரியர்கள் பெருகுறிஞ்சி என்று வழங்கியுள்ளனர்.
- இது 261 அடிகளைக் கொண்டது.
- இது தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் துறையில் அமைந்தது.
- தலைமகள் தினைப்புனம் காத்த வகையும் புலனாடியதும் பூக்கொய்தலும் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளன.
- இதில் செங்காந்தள் தொடங்கி மழை எருக்கம் பூ வரை 99 பூக்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.
- தலைமகள் இருக்கும் தினைப்புனத்திற்கு தலைவன் வருதல், தலைமகள் மகளிரிடம் பேச முயலுதல், அங்கு யானை வருதல், அதனை தலைமகன் துரத்துதல், தலைமகளை நீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றுதல், தலைமகன் தலைமகளைக் கூடுதல், மாலையில் தலைமகன் பெயர்தல், தலைமகளின் கலக்கம், இரவில் தலைமகள் வரும் வழியின் அருமை முதலிய செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- இவற்றையெல்லாம் தாயின் துயரத்தை போக்கவும், தலைமகளின் கற்பு நெறியை காக்கவும், தோழி சொல்லி அறத்தோடு நிற்கிறாள். ஆபரணங்கள் கெட்டால் திருத்தி செய்து கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் கெட்டால் மீண்டும் திருத்துவது இயலாது எனும் நல்ல கருத்து இனிது தெரிவிக்கப்படுகிறது.

**9. பட்டினப்பாலை**

- சோழன் கரிகாற் பெருவளத்தானை கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய இப்பாட்டு 301 அடிகளை கொண்டது.
- இது வஞ்சியடிகள் மிகுதியும் விரவிய ஆசிரியப்பாவாலும் அமைந்தது.
- புலவர் இதனை பாடியதற்காக பதினாறு நூறாயிரம் பொன் பரிசாக பெற்றார் என்பர்.
- சோழவள நாடும், காவிரிப்பூம்பட்டினமும், அங்கு வாழும் மக்களின் விளையாட்டுகளும் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களும், கடைத்தெருவும் அதனை ஆளும் திருமாவளவன் வரலாறும் அவன் ஆற்றலும் பேசப்படுகின்றன.

**10. மலைபடுகாடாம்**

- இப்பாட்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பல்குன்றக் கோட்டத்துச் செங்கமண் மாத்து வேள் நன்னன் சேய் நன்னனைப் பாடியது.
- 583 அடிகளைக் கொண்டது. இது கூத்தன் ஒருவன் மற்றொரு கூத்தனை மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.
- அதனால் இதற்கு கூத்தாற்றுப்படை என்ற பெயரும் உண்டு.
- மலைக்கு யானையை உவமித்து அதன் கண் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்தமையால் இப்பாட்டு மலைபடுகாடாம் என்னும் பெயரைப் பெற்றது.

**“அலகைத் தவிர்த்த வெண்ணருத் திறத்த**
**மலைபடு கடாஅம் மாதிரத் தியம்ப”**

என்னும் அடிகள் பாட்டின் பெயர்க் காரணத்தை புலப்படுத்துகின்றன.

- இந்நூலில் நன்னன் நாட்டிற்குச் செல்லும் வழியின் தன்மை, இடைவழியில் உண்ணக் கிடைக்கும் உணவுப் பொருட்கள், மன்னன் கொடை, நாட்டின் பெருமை, மலையில் தோன்றும் பலவித ஒலிகள், சோலையின் அலகு, சேயாறு, நன்னனது நாளோலக்கப் பொலிவு, கொடைச் சிறப்பு முதலியன சிறப்புறக் கூறப்படுகின்றன.

www.tnpscgroup4.in